**செய்தி வெளியீடு எண்: 221** **நாள்:02.04.2018**

## <u>பத்திரிக்கை செய்தி</u>

சிலை திருட்டு தடுப்புப் பிரிவில், கடந்த 22.03.2018ந் தேதியன்று 2004–ல் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோவிலின் அருள்மிகு தண்டாயுதபாணி உற்சவரின் புதிய பஞ்சலோக சிலை செய்ததில் மோசடி மற்றும் ஏமாற்று நடந்ததாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், சென்னை சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 1/2018ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. தொன்மை வாய்ந்த சிலைத் திருட்டு தொடர்புடைய வழக்குகளை புலன் விசாரணை மேற்கொள்வதும், தண்டனை பெற்றுத் தருவதும் சிலை திருட்டுத் தடுப்புப்பிரிவின் பொறுப்பாகும். மேற்சொன்ன வழக்கானது, சிலைத் திருட்டு வழக்கு இல்லை என்பதாலும், புதிய சிலை செய்வதில் எழுந்த மோசடி மற்றும் ஏமாற்று தொடர்பான வழக்கு என்பதாலும், இவ்வழக்கை சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவிலிருந்து குற்றப்பிரிவு குற்றப்புலானாய்வுத் துறைக்கு மேல் விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டு காவல் துறை தலைமை இயக்குநர் அவர்கள் இன்று ஆணை பிறப்பித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**